தேனீ இணையத்தளம்
கடந்த மாத பதிவுகள்
www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de
தேனீ 10 ஆண்டுகள் 22.02.2001 22.02.2011
Online Newspaper in Tamil Vol.10 23.09.2012

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழுமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா டுடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN

# புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (66)

## 66. என்னை பொய் சொல்ல வைத்த யோகியும் திலகரும்!



யாழ்.பல்கலைக்கழக கலாச்சாரக்குழுவின் கூட்டம் இரவு சுமார் 8 அணி அளவில் தொடங்கி நள்ளிரவு 1 மணி வரை நடைபெற்றதென்று நினைக்கின்றேன். அக்கூட்டத்தில் புலிகளின் ஆதரவு மாணவர்களான சிவரஞ்சித், சர்வேந்திரா போன்றோரும் தில்லை, செல்வி, கலா, விஜயரத்தினம் போன்ற மாற்று இயக்க அல்லது மாற்றுக் கருத்து உள்ள மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். வெளியிலிருந்து சிதம்பரநாதனும் நானும் கலந்து கொண்டோம்.

கூட்டத்தில் மெல்ல மெல்ல முரண்பாடான விடயங்கள் குறித்து விவாதங்கள் ஆரம்பமாயின. புலிகளுக்குச் சார்பான மாணவர்களே, கலாச்சாரக்குழு ஒரு பொது அடிப்படையில் செயல்பட வேண்டும் என்ற கருத்தைத்தான் வலியுறுத்தினார்கள். ஆனால் சிதம்பரநாதன் நேரடியாக புலிகளை ஆதரிக்க முடியாவிட்டாலும், புலிகளின் ஒரு துணை அமைப்பு போல அது செயல்பட வேண்டும் என்ற தோரணையில் விடயங்களை முன்வைத்தார். அதை பெரும்பாலோர் ஏற்கவில்லை. நள்ளிரவு வரை கூட்டம் நடைபெற்ற போதிலும் உறுதியான முடிவுகள் எதுவும் எடுக்கப்படாமலேயே கூட்டம் முடிவுற்றது.

அடுத்து வந்த நாட்களில் கலாச்சாரக்குழுவுக்குள் மேலும் விரிசல்கள் ஏற்படத் தொடங்கின. இதற்கிடையில் செல்வி மற்றும் பின்னர் தற்கொலை செய்துகொண்ட சிவரமணி போன்றோர் ஆங்கில நாடகம் ஒன்றை மேடை ஏற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வந்தனர். அதற்காக அச்சிட்ட நுழைவுச் சீட்டுகளை எனக்கும் எனது கடையில் கொண்டு வந்து இருவரும் தந்தனர்.

பல்கலைக்கழக வாசலுக்கு முன்னால் இருந்த கடையை இந்திய 'அமைதிப்படை' பீரங்கிக் குண்டால் தகர்த்துவிட, தற்காலிகமாக அதே சேர்.பொன். இராமநாதன் வீதியில் இருந்த இராமநாதன் பெண்கள் விடுதிக்கு முன்னால் இருந்த ஒரு கட்டிடத்தில் எனது கடையை நடாத்தி வந்தேன். இந்தியப்படை இலங்கைக்கு வந்து, பின்னர் புலிகளுடன் அமைதி முயற்சிகள் குழம்பி யுத்தம் ஆரம்பித்த பின்னரான ஆரம்ப நாட்களில், கொக்குவில் சென்ற இடத்தில் அங்கே சிக்கி வெளியேற முடியாத நிலையில், தெரிந்தவர்கள் சிலருடன் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் தஞ்சம் புகுந்து ஒரு மாதம் தங்க வேண்டி வந்தது.

இந்த யுத்தம் ஆரம்பிப்பதற்கு ஓரிரு நாட்கள் முன்னதாக பொழும்பிலிருந்து ஹாட்ரி இஸ்மாயில் என்ற பத்திரிகையாளர் யாழ்ப்பாணம் வந்திருந்தார். ஹாட்ரி இஸ்மாயிலின் சிநேகிதரான யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி கே.சிறிதரன், அவரை என்னிடம் எனது அறைக்கு அழைத்து வந்தார். வடக்கில் புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் இடையில் முறுகல் நிலை ஆரம்பமாகியதைத் தொடர்ந்து, அங்குள்ள நிலைமைகளை அவதானிக்க ஹாட்ரி இஸ்மாயில் பணி புரிந்த 'த ஐலன்ட்' (The Island) ) பத்திரிகை நிறுவனம், அவரை யாழ்ப்பாணம் அனுப்பி இருந்தது.

என்னிடம் அழைத்து வரப்பட்ட ஹாட்ரி இஸ்மாயில், புலிகளின் முக்கிய தலைவர்களில் யாராவது ஓரிருவரிரைப் பேட்டி காண விரும்புவதாகத் தெரிவித்தார். புலிகளின் தலைவர் பிரபாகரனை பேட்டி காண்பது சாத்தியமில்லை என்றபடியால், அப்பொழுது புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவராக இருந்த மாத்தையாவை ஹாட்ரி இஸ்மாயில் பேட்டி காண விரும்பினார். மாத்தையா எனக்கும் தனிப்பட்ட முறையில் பழக்கமானவராக இருந்த காரணத்தால், நான் மாத்தையாவை தொடர்பு கொள்ள முயன்றேன். ஆனால் அவர் பருத்தித்துறையில் முக்கியமான வேலைகள் காரணமாக நிற்பதாகவும், அவரைச் சந்திப்பது தற்போதைக்கு சாத்தியமில்லை என்றும் எனக்குச் சொல்லப்பட்டது.

மாத்தையாவுக்குப் பதிலாக புலிகளின் இன்னொரு முக்கியஸ்தரான லோறன்ஸ் திலகர் வந்து ஹாட்றி இஸ்மாயிலுக்கு பேட்டி கொடுப்பார் என நான் தொடர்பு கொண்ட புலிகளின் முக்கியஸ்தர் எனக்குக் கூறினார். அதன்படி திலகரை எனது அறைக்கு அழைத்து வருவதற்காக நான் திருநெல்வேலியிலிருந்த அவரது மறைவிடத்துக்குப் போனேன். அவரும் வேண்டிய 'பைல்கள்' சகிதம் என்னுடன் புறப்படத் தயாரானார்.

நாம் புறப்படத் தயாராகுகையில் திடீரென யோகி அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தார். அவர் அப்பொழுது புலிகளினால் ஆரம்பிக்கப்பட்ட 'விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி'யின் செயலாளர் நாயகமாக இருந்தார். (இந்த முன்னணியின் தலைவராக மாத்தையா வாகரையில் நடந்த அதன் முதலாவது மாநாட்டில் தெரிவு செய்யப்பட்டிருந்தார். முதலாவது மாநாட்டு அறிக்யொன்றை மாத்தையா என்னிடமும் கொண்டு வந்து நேரடியாகத் தந்திருந்தார். பின்னர் அந்த முன்னணி பிரபாகரனால் தடை செய்யப்பட்டது. அதற்கு பிரபாகரன் சொன்ன காரணம், போராட்ட களத்தில் நிற்க வேண்டிய 1000 பேரை, மாத்தையா முன்னணி என்ற பெயரில் வீணடிக்கிறார் என்பதாகும்)

திலகரிடம் வந்த யோகி, அவரை அப்பால் அழைத்துச் சென்று ஏதோ இரகசியமாகக் கதைத்தார். பின்னர் என்னிடம் வந்த யோகி, ஹட்றி இஸ்மாயிலை எப்படி எனக்குத் தெரியும், அவர் எவ்வாறு யாழ்ப்பாணம் வந்தார், எங்கு தங்கியிருக்கிறார் என என்னிடம் 'குறுக்கு விசாரணைகள்' செய்தார். நான் உள்ளதைச் சொன்னேன். பின்னர் அவர் புலிகளில் யாரும் ஹாட்றி இஸ்மாயிலை சந்திக்கும் நிலையில் இல்லையென்று கூறினார். அதற்கு அவர் சொன்ன காரணம், ஹட்றி இஸ்மாயில் 'ஐலன்ட்' பத்திரிகையில் புலிகளுக்கு எதிராகத் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வந்தவர் என்றும், கிழக்கு மாகாணத்தில் புலிகளது உறுப்பினர்கள் பலரை ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கம் படுகொலை செய்த போது, அதைத் திரித்து எழுதியவர் என்பதுமாகும்.

பின்னர் யோகி என்னிடம், நான் புலிகளில் யாரையும் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றும், இந்திய அமைதிப்படைக்கும் புலிகளுக்கும் இடையில் எந்த நேரமும் யுத்தம் வெடிக்கலாம் என்றபடியால், அவரை உடனடியாக பாதுகாப்பாக யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறும்படி ஹட்றி இஸ்மாயிலிடம் சொல்லும்படியும் கூறினார். நான் 'வெறுங்கையுடன்' திரும்பி ஹட்றி இஸ்மாயிலிடம் அவ்வாறே பொய் கூறினேன். அவரிடம் நான் புலிகளை சந்தித்த விடயத்தைக் கூறவில்லை. ஹட்றி இஸ்மாயிலை அழைத்து வந்த சிறிதரனிடம் மட்டும் நடந்த விடயத்தைக் கூறினேன்.

நான் கூறிய பொய்த் தகவல் ஹட்றி இஸ்மாயிலுக்கு ஏமாற்றமாக இருந்தது. வந்த நோக்கத்தை நிறைவேற்ற முடியாத அவர், யாழ்ப்பாணம் வரும்போது திறந்திருந்த ஏ9 வீதியும் மூடப்பட்டுவிட்டதால், பெரும் சிரமங்களுக்கூடே கேரதீவு - சங்குப்பிட்டி பாதையூடாக கொழும்பு திரும்பினார். அவர் கொழும்பு திரும்பும்போது புலிகளுக்கும் இந்திய



Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
சொல்ல மறந்த கதை:
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
ஜயசேனவும் ராஜகுலேந்திரனும்

[BBC](BBC)
[Newsnow](Newsnow)

அமைதிப்படைக்கும் யுத்தம் ஆரம்பமாகிவிட்டதால், அதில் சிக்கி சிறு காயங்களுடனே கொழும்பு சென்றதாகப் பின்னர் அறிந்தேன். (பிற்காலத்தில் ஹூட்றி இஸ்மாயில் அமெரிக்கா சென்று அங்குள்ள மிகப் பிரபலமான சஞ்சிகை ஒன்றில் பணியாற்றியதாக அறிந்தேன்)

இடையிடையே நான் சொல்ல வந்த விடயத்திலிருந்து விலகி இப்படியான சம்பவங்களைச் சொல்வதற்குக் காரணம் அன்றிருந்த சில சூழ்நிலைகளை எனது தொடரை வாசிப்பவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். இருப்பினும் எல்லாவற்றையும் இதில் சொல்லிவிட முடியாது. நான் தயாரிப்புச் செய்து கொண்டிருக்கும் எனது அரை நூற்றாண்டு அரசியல் - வாழ்க்கை அனுபவங்களை நூலாக வெளியிடும் போது, இந்த விடயங்கள் விஸ்தாரமாக இடம் பெறும் என்பதை மட்டும் இந்த இடத்தில் சொல்லி வைக்கின்றேன்.

நான் குறிப்பிட்ட ஆங்கில நாடகத்தை செல்வி, சிவரமணி ஆகியோர் அரங்கேற்றம் செய்வதை சிதம்பரநாதன் அவ்வளவாக விரும்பவில்லை என்பதை என்னால் அவதானிக்க முடிந்தது. அதற்கான காரணங்கள் இரண்டு. ஒன்று, அவர்கள் புலிகளுக்கு எதிரான அணியைச் சேர்ந்தவர்கள். இரண்டாவது, ;மண் சுமந்த மேனியர்' நாடகம் மிகவும் பிரபலமாக அரங்கேற்றப்பட்டு, புலிகளின் தலைவரின் நேரடியான பாராட்டுதலையும் பெற்ற பின்னர், நாடகம் என்றால் அது சிதம்பரநாதனுக்கு மட்டுமே உரியது என்ற ஒரு நிலை தோற்றுவிக்கப்பட்டு, 'தமிழீழத்தின்' ஆஸ்தான நாடக ஆசிரியராக அவர் தன்னைத்தானே மூடி சூடிக்கொண்டிருந்தார்.

'மண் சுமந்த மேனியர்' நாடகம் அரங்கேற்றப்பட்டதற்குப் பின்னர், சிதம்பரநாதனின் நெறியாள்கையில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை விமர்சித்து (அப்பொழுது இந்திய அமைதிப்படை இலங்கையில் நிலை கொண்டிருந்த நேரம்) தெருக்கூத்து ஒன்று போடப்பட்டது. அதைத் தொடர்ந்து இன்னொரு நாடகம் (அதன் பெயர் எனக்கு இப்பொழுது ஞாபகம் இல்லை) சிதம்பரநாதனின் நெறியாள்கையில் அரங்கேற்றப்பட்டது. ;மண் சுமந்த மேனியர்' போல அந்த நாடகம் யாழ்.பல்கலைக்கழக கலாச்சாரக்குழுவின் சார்பிலும் அரங்கேற்றப்படவில்லை. ஏனெனில் கலாச்சாரக்குழுவை புலிகளின் துணை அமைப்பாக மாற்ற எடுத்த முயற்சியால், அது செயல்பாடு இழந்து போயிருந்தது.

அதுமட்டுமின்றி, 'மண் சுமந்த மேனியர்; நாடகத்தின் கருப்பொருளில் இருந்த எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் பொதுத்தன்மை இல்லாத, புலிகளின் வெறும் இனவாதத்தை அடிப்படையாகக்கொண்டு சிதம்பரநாதனின் இந்த நாடகம் அமைந்திருந்தது. சிதம்பரநாதனின் இந்த இரண்டாவது நாடகம் ஒருமுறை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் அரங்கேற்றப்பட்டது. (அங்குதான் சிதம்பரநாதனின் மனைவி பத்மினி கற்பித்துக் கொண்டிருந்தார்) அந்த நாடகத்துக்கு நான் போகவில்லை. ஆனால் செல்வி, திலலை உட்பட பல மாற்றுக் கருத்தாளர்கள் போயிருந்ததுடன், அந்த நாடகத்தின் கருப்பொருளை (தமிழ் இனவாதத்தை) அவர்கள் அங்கு வைத்து கடுமையாக விமர்சனம் செய்ததாகவும் அறிந்தேன். அவர்களது விமர்சனத்தையிட்டு சிதம்பரநாதன் சினம் அடைந்ததாகவும் அறிந்தேன். அதன் காரணமாக சிதம்பரநாதனுக்கும் தில்லை, செல்வி போன்றோருக்கும் இடையிலான உறவுகள் மிகவும் பாரதூரமாக சீர்கேடடைந்தது என நினைக்கிறேன்.

பின் விளைவுகளைப் பற்றி பெரிதாகச் சிந்திக்காத ஒரு உத்வேகம் அன்றைய காலகட்டத்தில் செல்வி, தில்லை போன்ற பலரிடம் இருந்தது உண்மையே. ஆனால் அது அவர்களது வாழ்வுக்கு பிற்காலத்தில் எமனாக வரும் என்று அவர்கள் கருதியிருக்கவில்லை. அவர்களைப் புலிகள் கடத்தியதிற்கும், பின்னர் சித்திரவதை செய்து கொலை செய்ததிற்கும், அவர்களது இந்தப் பயமறியா உத்வேகம் எவ்வளவு தூரம் காரணியாக இருந்தது என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியாது. ஆனால் நாடகத்துறையில் அவர்களது பிரவேசமும், விமர்சனங்களும் அவர்களுக்கு வில்லங்கத்தைக் கொண்டு வந்ததில் முக்கிய பங்கு வகித்துள்ளன என்பது மட்டும் நிச்சயம். அதுபற்றி சில ஊகங்கள் அன்று உருவாகி இன்றுவரை தொடர்கின்றன.

இந்த விடயத்தைச் சொல்லும் போது இன்னொரு விடயமும் எனக்கு ஞாபகம் வருகிறது. யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதில் பட்டப்படிப்பை மேற்கொண்ட முதலாவது தொகுதி மாணவர்கள் சிலரை இன்றும் ஞாபகத்தில் வைத்துள்ளேன். அவர்களில் ஒருவர் மு.திருநாவுக்கரசு. இவர் தனது பட்டப்படிப்பின் முடிவில் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரை 'வடக்கில் (அல்லது யாழ்.குடாநாட்டில் என்று ஞாபகம்) இடதுசாரி இயக்கத்தின் தேற்றம்' என்பதாகும். அதற்கான தகவல்கள் திரட்டுவதற்காக அவர் எமது மார்க்கிச - லெனினிச கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்துக்கு வந்தபோது அவருடன் பரிச்சயம் ஏற்பட்டது.

அன்று முதல் என்னுடன் நட்புடனும், மிகுந்த மரியாதையுடனும் பழகி வந்த ஒருவர் அவர். பின்னர் அவர் தனியாகவும், 'ஈழநாதம்' ஆசிரியர் ஜெயராயுடனும் சேர்ந்து பல அரசியல் ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டார். மு.திருநாவுக்கரசு தன்னை ஒரு பொதுவான ஆள் மாதிரி காட்டிக்கொண்டு பல இயக்கத்தவர்களுடனும் பழகி வந்தாலும், புலிகள் மீதுதான் அவர் அதிக அபிமானம் வைத்திருந்தார். யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்னால் இருந்த எனது கடைக்கு அவர் அடிக்கடி வந்து அரசியல் விடயங்களைக் கதைப்பார். அடிப்படையில் மு.திருநாவுக்கரசு தமிழ் தேசியவாதியாக இருந்தாலும், மார்க்சியத்தை ஏற்பவராகவும், ஏகாதிபத்திய எதிர்ப்பாளராகவும் தன்னைக் காட்டிக் கொள்வார். ஆனால் பிற்காலத்தில் அன்ரன் பாலசிங்கத்துக்கு அடுத்ததாக புலிகளின் அரசியல் ஆலோசகர் போலவும் அவர் செயற்பட்டார்.

மு.திருநாவுக்கரசுவின் 'பிரசித்த பெற்ற' சில கருத்துக்களை நான் இங்கு குறிப்பிடுவது அவசியம். இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அவர் சொன்ன ஆலோசனை இந்தியா, இலங்கை உட்பட தென்னாசியாவிலுள்ள அத்தனை நாடுகளும் ஒரே நாடாக இணைந்து ;தென்னாசிய சம்மெளனம்' (South Asian Federation) என்ற பெயரில் இயங்க வேண்டும் என்பதாகும்!

ரெலோ இயக்கத்தை புலிகள் தடைசெய்யப் போகிறார்கள் என்ற விடயம் முன்கூட்டியே மு.திருநாவுக்கரசு போன்றவர்களுக்குத் தெரியும். அதன் காரணமாக என் போன்றவர்களுக்கும் தெரிய வந்தது. ரெலோ இயக்கத்தைத் தடை செய்வதற்கு சில நாட்கள் முன்னதாக புலிகளின் முக்கியஸ்தர் ஒருவர் எனது கடைக்கு அருகாமையில் வந்து திருநாவுக்கரசுவைச் சந்தித்தார். பின்னர் இருவருமாக பல்கலைக்கழகத்துக்குள் சென்று எனது கடைக்கு நேரே உள்ள மலைவேம்பு மரத்தினடியில் அமைந்திருந்த சீமெந்து இருக்கையில் அமர்ந்து நீண்டநேரம் சம்பாசித்தார்கள்.

புலி முக்கியஸ்தர் போன பின்பு என்னிடம் வந்த மு.திருநாவுக்கரசு, புலிகள் ரெலோவைத் தடைசெய்யப் போவதாகவும், அதுபற்றி தனது அபிப்பிராயத்தைக் கேட்கவே அந்த புலி முக்கியஸ்தர் வந்ததாகவும் சொன்னார். அதற்கு திருநாவுக்கரசு சொன்ன பதிலைக் கேட்க நான் ஆவலாக இருந்தேன். ஏனெனில் மற்றைய இயக்கங்களைத் தடை செய்வது ஜனநாயக விரோதம் என திருநாவுக்கரசு அந்தப் புலி முக்கியஸ்தருக்கு எடுத்துரைத்திருப்பார் என நான் எதிர்பார்த்தேன். ஆனால் திருநாவுக்கரசு புலி முக்கியஸ்தருக்குச் சொன்ன ஆலோசனை, ரெலோவைத் தடை செய்வது பிரச்சினை இல்லை, ஆனால் அதை பொதுமக்கள் ஏற்கக்கூடிய விதத்தில், அவர்களுக்குத் தகுந்த விளக்கத்தை கொடுக்க வேண்டும் என்பதாகும்!!

புலிகள் 1995 அக்கோடபரில் 2 மணித்தியால இடைவெளியில் யாழ்ப்பாண மக்களை அங்கிருந்து வெளியேற்றினார்கள். அந்த நேரத்தில் யாழ்.பல்கலைக்கழ மருத்துவ பீடத்திலிருந்த முக்கியமான உபகரணங்கள், மருந்துகள், யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்த மருந்துகள் - உபகரணங்கள், தனிப்பட்ட வர்த்தக நிறுவனங்களில் இருந்த நானாவிதமான பொருட்கள் என எல்லாவற்றையும் லொறி லொறியாக வன்னிக்குக் கொண்டு சென்றார்கள். அந்த நேரத்தில் மு.திருநாவுக்கரசு ஒர் அபூர்வமான ஆலோசனையை புலிகளிடம் முன் வைத்ததாக அறிந்தேன். அதாவது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தையே வன்னிக்குக் கொண்டு சென்று தலைமறைவாக (Underground) செயற்பட வைப்பதற்கு புலிகளுக்கு ஆலோசனை வழங்கினாராம்!!! (யாழ்.பல்கலைக்கழகத்தில் குறைந்த பட்சம் ஒர் உதவி விரிவுரையாளராகத்தன்னும்

வருவதற்கு மு.திருநாவுக்கரசு எடுத்த முயற்சிகள் பலனளிக்காததால், ஒருவித விரக்தியில் அவர் இருந்தார். வன்னிக்கு புலிகள் பல்கலைக்கழகத்தைக் கொண்டு போயிருந்தால், புலிகள் திருநாவுக்கரசுவை சில Nளைகளில் அதன் உப வேந்தராகவே நியமித்திருக்கவும் கூடும்!)

நான் இங்கு சொல்ல வந்த மிக முக்கியமான விடயம் என்னவென்றால், 1990 அக்டோபரில் புலிகள் வடக்கில் வாழ்ந்த முஸ்லீம் மக்களை உடுத்த துணியுடன் சில மணித்தியால அவகாசத்தில் விரட்டி அடித்தார்கள். அதற்கு சில நாட்கள் முன்னதாக ஒருநாள் மு.திருநாவுக்கரசு என்னிடம் வந்து முஸ்லீம்களின் போக்கு சரியில்லை என்றும், அவர்கள் இப்படியே போனால் அவர்களை வடக்கிலிருந்து வெளியேற்றும் சூழ்நிலை ஏற்படலாம் என்றும் சொன்னார். அவரது கருத்தை நான் அப்பொழுது அவ்வளவு பாரதூரமாக எடுக்கவில்லை. ஆனால் சில நாட்களில் அவர் சொன்னது போலவே, புலிகள் முஸ்லீம் மக்களை வடக்கிலிருந்து விரட்டி அடிக்கிறார்கள்.

இதை நான் இங்கு ஏன் சொல்கிறேன் என்றால், புலிகள் தமது இயக்கத்தில் உள்ளவர்கள் சொல்கிறதைத்தான் கேட்டு நடப்பது வழமை என்றாலும், இயக்கத்துக்கு வெளியே இருந்த தமக்கு மிகவும் நெருக்கமான மு.திருநாவுக்கரசு, சிதம்பரநாதன் போன்றவர்களின் ஆலோசனைகளையும் அவ்வப்போது கேட்டு வந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டவே.

மு.திருநாவுக்கரசு 1995 இடப்பெயர்வின் பின்னர் வன்னிக்குச் சென்று புலிகளின் தீவிரமான ஒரு பிரச்சாரகராக மாறிச் செயல்பட்டார். 2009ல் பலிகள் முற்றுமுழுதாக அழிக்கப்பட்ட பின்னர் இராணுவத்திடம் சரணடைந்து, இடம்பெயர்ந்த மக்களுக்கென அமைக்கப்பட்ட முகாம்களில் வந்து தங்கியவர்களில் அவரும் ஒருவர். 'மடியிலை கனம் இருப்பவனுக்குத்தான் வழியிலை பயம் இருக்கும்' என்பது போல, தனது புலித் தொடர்புகள் சம்பந்தமாக பயத்துடன் இருந்த மு.திருநாவுக்கரசு, பின்னர் சில தொடர்புகளைப் பயன்படுத்தி மன்னார் ஊடாக வள்ளத்தில் இந்தியாவுக்குத் தப்பிச் சென்று, இப்பொழுது அங்கு 'அஞ்ஞாதவாசம்' செய்கிறார்.

எனது நண்பர் ஒருவர் அடிக்கடி கூறுவது போல, இவர்கள் எல்லோரும் 'தண்ணீர் வற்றின குளத்து தாமரைக் கிழங்குகள்'. எப்பொழுது மீண்டும் (புலி) மழை பொழிகிறதோ, அப்பொழுது கிசுகிசுவென முளைப்பதற்குத் தயாராக உறங்கு நிலையில் இருக்கின்றார்கள்.

தொடரும்

முன்னைய பதிவுகள்